# மகாகவி பாரதியார்

வளர்நிலை : 5

அனைவருக்கும் எனது அன்பின் வணக்கம்.

கவி பாடும் திறமையில் நம் அனைவரையும் கவர்ந்த பாரதியைப் பற்றி என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து சில வார்த்தைகள்.

மகாகவி பாரதியார் ஒரு தமிழ்க் கவிஞர், சுதந்திர போராட்ட வீரர் மற்றும் பெண் விடுதலைக்காகப் பாடுபட்டவர். பாரதி அவர்கள் எட்டயபுரத்தில் டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி 1882 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தை சின்னசாமி ஐயர், தாயார் இலட்சுமி அம்மாள் ஆவார்.

இவருக்கு 11 வயது இருக்கும் போது, இவரது கவி பாடும் ஆற்றலையும் புலமையையும் பாராட்டி எட்டயபுர மன்னர் இவருக்கு பாரதி என்ற பட்டத்தை வழங்கினார்.

கண்ணன் பாட்டு, குயிற் பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திச்சூடி போன்ற புகழ்பெற்ற காவியங்கள் பாரதியால் எழுதப்பட்டது. "சாதிகள் இல்லையடி பாப்பா "என்று கூறிய பாரதி தீண்டாமையை அறவே வெறுத்தார்.

பாரதியார் தேசியக் கவிஞர், மகாகவி போன்ற பல பெயர்களால் போற்றப்படுகின்றார்.

பாரதியார் 1921 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி தனது 39 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வில் இருந்து விடுதலை பெற்றார். பாரதியார் இவ்வுலகில் இல்லாவிடினும் இவ்வுலகம் உள்ள  வரைக்கும் எம் தமிழ்த் தலைவன் பாரதி புகழ் மணக்கும்.

நன்றி,  வணக்கம்!